# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 85 — 1973 නොවැම්බර් 09 වැනි සිකුරාදා — 1973.11.09

85 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருக்க் கோவை செய்துவைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1203 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1214 |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | 1210 | ஏலவிற்பனைகள் | — |
| ஆய்விற்பனையும், குத்தகை விற்பனையும் | 1211 | நாஞுவித அறிவித்தல்கள் | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### 1974 ம் நிதியாண்டில் வெலிக்கடைச் சிறைச்சாலையின் கைத்தொழில் பகுதிக்கு மூலப்பொருட்கள் வழங்குவதற்கான கேள்விகள்

1974 ம் நிதியாண்டில் கீழே குறிக்கப்பட்டுள்ள பொருட்களுக்காய கேள்விகள் கொழும்பு 9 இலுள்ள வெலிக்கடைச் சிறைச்சாலையின் கைத்தொழிற் பகுதியால் 28 ம் திகதி நவம்பர் மாதம் 1973 ம் ஆண்டு காலை 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள் இலங்கையர்களிடமிருந்தே ஏற்றுக் கொள்ளப்படும்.

3. பொருட்களும் அவற்றிற்காய கேள்விப்பத்திரப் பிணைப்பணம், கேள்விப்பத்திர வைப்புப்பணம் பற்றிய விபரங்கள் பின்வருமாறு :—

| | விநியோகிக்கவேண்டிய பொருட்கள் | கேள்விப் பத்திர வைப்புப்பணம் ரூ. | ச. | பிணைப் பணம் ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| 1. | எருமைத்தோல் | 20 | 0 | 200 | 0 |
| 2. | பசுத்தோல் | 20 | 0 | 300 | 0 |
| 3. | இறப்பர் அடியும் குதியும் | 20 | 0 | 300 | 0 |
| 4. | விளக்குமாற்றுக்குப் பிடி | 20 | 0 | 200 | 0 |
| 5. | சுத்தப்படுத்திய தென்னம் ஈக்கு | 20 | 0 | 200 | 0 |
| 6. | பன் புல்லு | 20 | 0 | 300 | 0 |
| 7. | தென்னம் தும்பு தனிப்பட | 20 | 0 | 200 | 0 |
| 8. | தும்பு மெத்தைக்கு | 20 | 0 | 200 | 0 |
| 9. | மாதம்பை பிரம்புகள் | 20 | 0 | 300 | 0 |
| 10. | சிரட்டைக் கரி | 20 | 0 | 200 | 0 |
| 11. | பேக்கரி நெய் (அடைக்கப்பட்ட) | 20 | 0 | 200 | 0 |
| 12. | பாண் ஊக்கி (Bread Improver) | 20 | 0 | 200 | 0 |

4. **விசேட விதிகள்.**—வெலிக்கடைச் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லும் பொருட்கள் பற்றியது :—

(1) நன்கு காய்ந்தனவாயும் எண்ணெயூட்டப்பட்டுச் சப்பாத்துக்கள் செய்யப்படக் கூடியனவாயும் இருத்தல் வேண்டும். இதில் முழுவதின் 5% கழிவாக ஒதுக்கப்படும்.

(2) முதலாந் தர குறேம் தோல்கள் யாவும் வர்த்தக அடையாளமோ துணைகளோ இல்லாததாய்ச் சப்பாத்துச் செய்யக்கூடியதாய் இருக்க வேண்டும். இதில் 5% கழிவாக ஒதுக்கப்படும்.

(3) இறப்பர் சோல்கள்.—பல்வேறு அளவுகளில் இறப்பர் குதிகள் $2\frac{3}{4}$" தொடக்கம் 4" அளவுகளில் இருக்க வேண்டும்.

(4) ஐந்தடி நீளத்திற்குக் குறையாத நேரான தடிகள்.—டவாரா, அற்றெரியா, கொபல்லா முதலிய மரங்கள் அதன் சுற்றளவுகள் 3" இலிருந்து $3\frac{1}{2}$" வரைக்கும்.

(5) துப்பரவாக்கி, பதப்படுத்திக் காய விடப்பட்ட நீள ஈக்குகள் ஒவ்வொன்றின் நீளம் 3 அடி ஆக இருத்தல் வேண்டும். இதில் 5% கழிவாக ஒதுக்கப்படும்.

(6) கைத்தறிப் பாயைப் பொறுத்தமட்டில் $3\frac{1}{2}$ அடி நீளமானது தேவைப்படும். இதில் 5% கழிவாக ஒதுக்கப்படும்.

(7) நன்கு துப்பரவாக்கப்பட்டுக் காய விடப்பட்ட தூசில்லாத துடைப்பம், தூரிகை என்பன செய்வதற்குத் தேவைப்படுவனவையாகும். இதில் 5% கழிவாக ஒதுக்கப்படும்.

(8) நன்கு துப்பரவாக்கப்பட்டுக் காய்ந்த மாசுகள் இல்லாத முதலாம் தரமான பாய் வகைகள் செய்வதற்குத் தேவைப்படுவனவையாகும். இதில் 5% கழிவாக ஒதுக்கப்படும்.

(9) பிரம்புகள் யாவும் துப்பரவாக்கி, பதப்படுத்திக் குறைந்த பட்சம் 7 அடி நீளமுடையதாகவும் கூடை பின்னவோ அல்லது வேறெந்தத் தேவைக்கோ பயன்படுத்தக் கூடியதாய் இருத்தல் வேண்டும். பிரம்பின் சுற்றளவு $\frac{1}{2}$" இலிருந்து $1\frac{1}{2}$" வரைக்கும் இருத்தல் வேண்டும்.

(10) நடுத்தரமாய் எரியக்கூடியதாயும் தூள்கள் இல்லாததாயும் சிரட்டைக் கரியானது இருத்தல் வேண்டும். பெருந் தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்காக $\frac{1}{2}$" சதுரத்திற்குக் குறைந்த அளவில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. தூள்கள் சேதம் எனின் முழுவதின் 5% கழிவாக ஒதுக்கப்படும்.

(11) பேக்கரி நெய் தகரத்தில் நன்கு அடைபட்டிருத்தல் வேண்டும்.

---

**முக்கிய அறிவித்தல்**

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 15 ந் உ.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

---

(12) பாண் ஊக்கி மூடப்பட்ட பைகளில் பாண் தயாரிப்பதற்குச் சீனிக் காகப் பிரதியீட்டக் கூடியதாய் இருத்தல் வேண்டும்.

5. மூன்றும் பந்தியால் குறிப்பிட்ட பொருட்களில் சிலவற்றிற்கோ அன்றி முழுவதற்குமோ கேள்விகள் கோரலாம்.

6. பொருட்களின் மாதிரிகளைப் பெயர், விலாசம் எழுதிய வெவ்வேறு உறைகளில் இட்டு இதன் கீழ்க் கையொப்பம் இட்டவரிடம் ஒப்படைக்க வேண்டும். கேள்விகளின் இறுதித் தினத்திற்குப் பிந்திய மாதிரிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. இறப்பரினுல் ஆன சோல்கள், றீல்கள் என்பவற்றின் மாதிரிகளை ஒப்படைக்கும் இடத்து அவை இலங்கை விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சிக் கழகத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைந்தவை என்பதைக் காட்டும் பொருட்டு மேற்படி இலங்கை விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சி நிலையத்தின் அடையாளமுடைய தாய் இருத்தல் வேண்டும்.

7. கேள்விப் பத்திரங்கள் பெறும் வகையில் மீளப் பெறக்கூடிய வைப்புப் பணத்தைப் பின்வரும் நிலையங்கள் செலுத்த வேண்டிய அவசியமில்லை :—

(அ) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் ;

(ஆ) வேறு அரசாங்கத்தின் அரசாங்க விற்பனை நிறுவனங்கள் ;

(இ) உள்ளூர் அபிவிருத்திச் சபைகள் (கூட்டுறவு அபிவிருத்திச் சபை அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்டவை) ;

(ஈ) கூட்டுறவுச் சபையால் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்.

8. கேள்விகள் யாவும் 27 ம் திகதி நவம்பர் மாதம் 1973 ம் ஆண்டு பிற்பகல் 2 மணி வரைக்கும் கிடைக்கக் கூடிய பத்திரங்களில் கீழே கையொப்பமிட்டவருக்கு அனுப்பப்படல் வேண்டும். இப்படிவங்கள் அவற் றிற்குரிய வைப்புப் பணத் தொகையைச் செலுத்துவதற்காய பற்றுச் சீட்டைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வைப்புப் பணத்தை, ஆணையாளர், சிறைச்சாலைப் பகுதி, கொழும்பு 9 என்ற முகவரிக்கு நேரடியாகச் செலுத்தலாம். அல்லாவிடின் கொழும்புக்கு வெளியே யுள்ள கச்சேரியில் செலுத்தலாம்.

9. கேள்விப் பத்திரங்கள் யாவும் மூடப்பட்ட அரக்கு முத்திரையிட்ட உறைகளில் " ........................க்கான கேள்விகள் " என அதன் இடது பக்க மேல் மூலையில் குறித்துப் பதிவுத் தபாலில் அல்லது இவ்வலுவலகத்தின் கேள்விப் பத்திரத்திற்கான பெட்டியில் கீழே கையொப்பமிட்டவருக்கு நேரடியாகச் சமர்ப்பிக்கலாம்.

10. கேள்விகளின் விலைக் குறிப்பீடுகள் யாவும் இலக்கத்திலும் தெளிவான எழுத்திலும் காட்டப்படல் வேண்டும். விலைக் குறிப்பீடுகள் இலக்கத்திலும் சொற்களிலும் காட்டப்படாவிடத்துக் கேள்விகள் மறுக்கப் படும். ஏதாவது மாற்றங்கள் புகுத்துதல் செய்ய நேரின் அவை கேள்விக் காரரின் முதலெழுத்துக்களால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

11. கேள்விகள் யாவும் 28 ம் திகதி நவம்பர் மாதம் 1973 ம் ஆண்டு காலை 10.35 மணிக்குக் கீழே குறிப்பிட்ட அலுவலகத்தில் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர்கள் அங்கு பிரசன்னமாய் இருப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

12. கொந்தராத்துக்காரர்களால் மதிப்பிடப்பட்டு அப்பொருட்களை அவர் சிறைச்சாலைக் கைத்தொழில் அதிபரால் வழங்கப்படும் காலத்தில் சமர்ப் பிப்பதற்குத் தவறினுல் மேற்படிச் சிறைச்சாலைக் கைத்தொழிற் பகுதி அதிபருக்கு எங்கிருந்தோ பொருட்களைக் கொந்தராத்துக்காரர்கள் அப் பொருட்களைக் கொண்டு வந்து கொடுப்பதற்குக் கட்டளையிடவோ அல்லது அதற்குரிய தண்டனைப் பணத்தை அவர் தவறும் ஒவ்வொரு நாளுக்கும் விதிக்கவோ உரிமை உண்டு.

13. சித்தி பெறும் கேள்விக்காரர் இலங்கையர்களையே வேலைக்கு அமர்த்தலாம்.

14. கேள்விகள் சிலவற்றையோ அன்றி முழுவதையுமோ அல்லது கேள்வியின் பின் நடைமுறையில் இருக்கும் பொருட்கள் விநியோகத்தைத் தடுத்து நிறுத்தவோ, இரத்துச் செய்யவோ சிறைச்சாலைப் பகுதிக் கைத் தொழில் அதிபருக்கு உரிமை உண்டு.

15. சித்தி பெறும் கேள்விக்காரர்கள் அறிவித்தல் கிடைத்த தினத் தில் இருந்து பத்து நாட்களுக்குள் சிறைச்சாலையின் கைத்தொழிற் பகுதி யின் அதிபரின் உடன்படிக்கைக்குக் கைச்சாத்திடுவதற்குத் தயாராய் இருக்க வேண்டும். தவறின் இவரது கேள்விப் பத்திரப் பணம் முடிக்குரிய சொத்தாக்கப்படுவதோடு இவரின் பெயரும் விலாசமும் தடுத்து நிறுத்தப் பட்ட கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் சேர்க்கப்படும்.

16. அவசியமேற்படுமிடத்து, மேலும் தேவையான விபரங்களை இதன் கீழ்க் கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஈ. எல். பெரேரா,
அதிபர்,
சிறைச்சாலைக் கைத்தொழிற் பகுதி.

கைத்தொழிற் பணியகம்,
வெலிக்கடைச் சிறைச்சாலை,
கொழும்பு.

11–317—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

## கண்டி, போகம்பரைச் சிறைச்சாலைக் கைத்தொழில் பகுதிக்கு 1974.01.01 திகதியிலிருந்து 1974.12.31 திகதிவரை உள்ள காலத்தில் மூலப் பொருட்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள்

கண்டி, போகம்பரைச் சிறைச்சாலை கைத்தொழில் பகுதிக்கு 1974.01.01 திகதியிலிருந்து 1974.12.31 திகதிவரை உள்ள காலத்தில் கீழ்க்காணும் மூலப்பொருட்களுக்கு கேள்விப்பத்திரங்களை 28.11.73 ம் திகதி காலை 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

3. கேள்விப் பத்திரங்களுக்கான கட்டுப்பண விபரங்கள் பின்வரு மாறு :—

| மூலப்பொருட்கள் | | கேள்விப் பத்திர கட்டுப் பணம் | | பிணைப் பணம் |
|---|---|---|---|---|
| | | ரூ. ச. | | ரூ. ச. |
| (அ) மாதம்பை பிரம்பு வழங்குதல் | .. | 50 0 | .. | 1,000 0 |
| (ஆ) பிறிஸ்டல் தும்பு வழங்குதல் | .. | 10 0 | .. | 300 0 |
| (இ) மெத்தை தும்பு வழங்குதல் | .. | 10 0 | .. | 300 0 |
| (ஈ) சிரட்டைக் கரி வழங்குதல் | .. | 10 0 | .. | 100 0 |
| (உ) சுத்தமான ஈக்கில் வழங்குதல் | .. | 10 0 | .. | 100 0 |
| (ஊ) கல்வா ஓலை வழங்குதல் | .. | 10 0 | .. | 100 0 |
| (எ) துடைப்பக் கம்பு கை பிடிகள் வழங்குதல் | .. | 10 0 | .. | 200 0 |
| (ஏ) மூங்கில் குழாய்கள் பாய் இழைத்தலுக்கு | .. | 10 0 | .. | 300 0 |
| (ஐ) மரக்கட்டைகளை கண்டி புகையிரத நிலை யத்திலிருந்து போகம்பரைச் சிறைச் சாலைக்கு கொண்டு வருவதற்கு | .. | 10 0 | .. | 250 0 |

4. விசேட நிபந்தனைகள்.—எல்லா மூலப் பொருட்களையும் போகம் பரை சிறைச்சாலைக்கு கொண்டு வருதல் வேண்டும்.

(அ) பிரம்புகள் நன்றாக முற்றியிருத்தல் வேண்டும். கூடை இழைப்ப தற்குகந்ததாயிருத்தல் வேண்டும். பிரம்புகள் ஆகக்குறைந்தது 7 அடி நீளமும் வட்டச் சுற்றளவு $\frac{1}{2}$ அங்குலமாக இருத்தல் வேண்டும்.

(ஆ) பிறிஸ்டல் தும்பு நன்ருகச் காய வைத்து சீவி தூசு இல்லாத ஒவ்வொரு கட்டும் 28 இருத்தல் கொண்டதாக இருத்தல் வேண்டும். குறைந்தபட்சம் 12 அங்குல பிறிஸ்டலாக இருக்க வேண்டும். 5% காய்தலுக்கு குறைக்கப்படும். நனைந்த நிறம் மாறிய தும்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(இ) மெத்தை தும்பு நன்ருக காயவைத்து சீவி தூசு இல்லாதவை யாக ஒவ்வொன்றும் 14 இருத்தல் கொண்ட கட்டுகளாக மெத்தைக்குகந்ததாக இருத்தல் வேண்டும். நனைந்து நிறம் மாறிய தும்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. காய்தலுக்காக $7\frac{1}{2}$% வரை தூசு முதலானவைகளுக்குக் கழிக்கப்படும்.

(ஈ) சிரட்டைக் கரி சாரணமாய் எரிந்த துருத்திகளுக்கும் ஸ்திரிக்கை பெட்டி சூடாக்குவதற்கும் உகந்ததாய் இருத்தல் வேண்டும். அதிகமாக எரிந்ததும் $\frac{1}{2}$ அங்குலத்திற்கு குறைந்த துண்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தூசு முதலியவைகளுக்கு 5% தொடக்கம் $7\frac{1}{2}$% வரை கழிக்கப்படும்.

(உ) ஈக்கில் நன்ருக முற்றிய காய்ந்தவையாகவும், சுத்தமானதாயும் இருத்தல் வேண்டும். 2% காய்தலுக்குக் குறைக்கப்படும்.

(ஊ) கல்வா ஓலை பாயிழைத்தலுக்கு உகந்ததாய் நன்ருக காய்ந்து முற்றிய 4 அடி நீளம் $\frac{3}{16}$ அங்குல மொத்தமாகவும் இருத்தல் வேண்டும்.

(எ) துடைப்பங்களுக்கு தேவையான கைபிடிகள்.—இவைகள் தல மாக பெல்ல, மல்கார, வொருட்டு, கொய்யா, பெனலிய, கறுவா, அட்டோரியா அல்லது $4\frac{1}{2}$ அடி நீளமும் 3 அடி தொடக்கம் 4 அங்குல சுற்றளவுள்ள கனதியான கம்புகளா யிருத்தல் வேண்டும்.

(ஏ) புதிய மூங்கில் கீறுகள் நன்றாக முற்றிய, நேரான பாயிழைத்த லுக்கு உகந்தனவாய் 8 அடி நீளத்திற்கு குறையாமலும், குறைந்தது 1½ அங்குல சுற்றளவுமுள்ளனவாய் இருத்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் மேல் 3 ம் பந்தியில் கூறியவைகளில் ஒன்றிற்கு அல்லது பலதிற்கோ ஒரே முறையில் அனுப்பி வைக்கலாம்.

6. மேற்கூறியவைகளின் சாம்பிள்கள் கேள்விப்பத்திரம் சமர்ப் பிக்கும் போது கீழ் கையொப்பமிட்டவரின் காரியாலயத்திற்கு ஓர் உறையில் போட்டு விண்ணப்பக்காரரின் பெயரும், முகவரியும் இட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

7. கீழ்க்காணும் நிறுவனங்களுக்கு கேள்விப்பத்திரம் பெறுவதற்கு திருப்பிக் கொடுக்கும் கட்டுப்பணம் கொடுக்க தேவையில்லை :—

(அ) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்.

(ஆ) அரசாங்கத்தினால் நடாத்தப்படும் விற்பனை ஸ்தாபனம்.

(இ) கிராம அபிவிருத்திச் சபைகள், கிராம அபிவிருத்தி அத்தியட்சகரி னால் அனுமதிக்கப்பட்டவைகள்.

(ஈ) கூட்டுறவு ஆணையாளரினால் மதிக்கப்பட்ட கூட்டுறவு சமாசங்கள்.

8. விண்ணப்பப் பத்திரங்கள் 1973.11.27 ம் திகதி பி. ப. 2.30 மணி வரை கீழ் கைச்சாத்திட்ட உத்தியோகத்தருக்கு விண்ணப்பித்து அல்லது கட்டுப்பணத்தை கொழும்புச் சிறைச்சாலை பகுதி தலைமை காரியாலயத்திலும் அல்லது ஏதாவது கச்சேரியில் கட்டிய பற்றுச் சீட்டை சமர்ப்பிப்பவர்களுக்கு மாத்திரம் கொடுக்கப்படும்.

9. கேள்விப்பத்திரங்கள் குறிப்பிட்ட உறையில் இடப் பக்கத்தில் " .......... கேள்விப் பத்திரங்கள் " என்று எழுதி பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

10. கேள்விப் பத்திரத்தில் ரேட்டுகள் எழுத்திலும், இலக்கத்திலும் எழுதுதல் வேண்டும். எழுத்திலும் இலக்கத்திலும் கொடுக்கப்படாத கேள்விப்பத்திரம் நிராகரிக்க இடமுண்டு. ஏதாவது மாற்றமோ அல்லது வெட்டி எழுதினால் அதன் மேல் விண்ணப்பக்காரர் கையொப்பமிட வேண்டும்.

11. 1973 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28 ந் திகதி மு. ப. 10.35 மணிக்கு கீழ்க்காணும் அதிகாரியின் காரியாலயத்தில் விண்ணப்பங்கள் திறந்து பார்வையிடப்படும். விண்ணப்பம் திறக்கப்படும்போது விண்ணப் பித்தவர்கள் அல்லது அவரின் அனுமதி பெற்ற பொறுப்பாளர் இருக்க அனுமதி வழங்கப்படும்.

12. குறிப்பிட்ட தவணையில் விண்ணப்பித்தவர் குறிப்பிட்ட பொருட் கள் கொடுக்கத்தவறினால் வேறு இடங்களில் பொருட்களை கொந்து ராத்துக்காரரின் செலவில் வாங்குவதற்கும் அத்துடன் கொடுக்கத் தவறினால் ஒவ்வொரு நாட்களுக்கு தண்டணையாகப் பணம் கட்ட கட்டளையிட அதிகாரி அவர்களுக்கு அதிகாரம் உள்ளது.

13. ஒப்பந்தக்காரர் இலங்கையர்களை மாத்திரமே வேலைக்கமர்த்த லாம்.

14. வேண்டிய விண்ணப்பத்தை ஏற்கவோ, நிராகரிக்கவோ கண்டி சிறைச்சாலை அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

15. விண்ணப்பம் ஏற்றுக்கொண்டதாக அறிவித்த நாளிலிருந்து 10 நாட்களுக்குள் கையொப்பமிட வராவிட்டால் கட்டுப்பணம் அரசாங்கத் திற்கு சேரும். அத்துடன் விண்ணப்பக்காரரின் பெயர் ஏமாற்றிய ஒப்பந்தக்காரரின் வரிசையில் சேர்க்கப்படும்.

16. வேறு விபரங்கள் யாவும் கீழ்க் கையொப்பமிட்ட அதிகாரியின் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பி. டபிள்யு. பெரேரா,
சிறைச்சாலை அதிகாரி.

போகம்பரைச் சிறைச்சாலை,
கண்டி.
30.10.73

11-318—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

**திருகோணமலையில் இலங்கைக் கடற்படையில் டொக்யாட்டிலிருக் கும் ஹயிட்ராபோயில் படகும் அதற்குரிய உதிரிப் பொருட்களின் விற்பனை சம்பந்தப்பட்ட கேள்வி**

திருகோணமலையில் இலங்கைக் கடற்படையில் டொயாட்டிலிருக் கும் ஹயிட்ராபோயில் படகும் அதற்குரிய உதிரிப் பொருட்களின் விற்பனை சம்பந்தமான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. மேற்கூறிய சேவைக்குரிய கேள்விப் பத்திரங்கள் இலங்கைக் கடற்படைத் தளபதியினால், கொழும்பு 1, த. பெ. இல. 593, கடற் படைத் தலைமைக் காரியாலயத்தில் கீழ்க்காணும் விதியில் வழங் கப்படும்.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் கடைசித் திகதியும் நேரமும்— 1973, நவம்பர் 26 ந் திகதி பகல் 12.00 மணிவரை.

கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசித் திகதி யும் நேரமும் :—1973, நவம்பர் 27 ந் திகதி மு. ப. 10.00 மணி வரை.

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியும் நேரமும் :—1973, நவம்பர் 27 ந் திகதி மு. ப. 11.00 மணி.

3. கேள்வியாளர்கள் தமது முழுப் பெயரையும், முகவரியையும் கேள்விப் பத்திரத்திற்கான விண்ணப்பத்தில் கொடுக்கவேண்டும்.

டி. பி. குணசேகர,
கொமதோர்,
கடற்படைத் தளபதி.

11-337—09 11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

**நீர்கொழும்புச் சிறைச்சாலைக் கைத்தொழில் பகுதிக்கு 1973-74 ஆம் நிதி ஆண்டுக்கான மூலப் பொருட்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்**

கீழே கைச்சாத்திட்டவராகிய நான் நீர்கொழும்புச் சிறைச்சாலைக் கைத் தொழில் பகுதிக்கு 1.1.1974 — 31.12.1974 நிதி ஆண்டுவரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை வழங்குவதற்குரிய கேள்விப்பத்திரங் களை 1973 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12 ம் தேதி காலை 10.30 மணி வரைக்கும் பெற்றுக்கொள்வேன்.

2. இலங்கைப் பிரஜைகளிடம் மட்டுமே கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

3. கேள்விப்பத்திரங்களுக்குரிய கேள்விகளும் பிணைப்பணமும் கீழே குறிக்கப்பட்டுள்ளன.

| | கேள்விப்பத்தி ரங்களுக்குரிய பணம் | | பிணைப் பணம் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| (அ) தும்புக்கட்டைக்குரிய தடிகள் .. | 25 | 0 .. | 300 | 0 |
| (ஆ) சுத்திகரிக்கப்பட்ட தும்புகள் (தரம் 1) | 25 | 0 .. | 200 | 0 |
| (இ) ஈர்க்குகள் .. .. | 25 | 0 .. | 200 | 0 |
| (ஈ) மாதம்பை பிரம்புகள் .. | 25 | 0 .. | 200 | 0 |

4. முக்கிய குறிப்புகள்.—நீர் கொழும்புச் சிறைச்சாலையிலே பொருட்கள் கொடுக்கப்பட வேண்டும்.

(அ) ஈர்க்குத் துடைப்பத்திற்கும், தும்புத் துடைப்பத்திற்கும் வேண்டிய கைப்பிடி வகைகள்:—

டவற்ற,கபெல, அற்றேரிய போன்ற வைரமான மரமுள்ளதாகவும், குறைந்தது 5' அடி நீளமும், குறைந்த சுற்றளவு 3 அங்குல மாகவும், கூடிய சுற்றளவு 4 அங்குலமாகவும், நீர்கொழும்பு சிறைச்சாலை அதிகாரியின் விருப்பத்திற்குரியதாகவும், கைப்பிடி கள் நேராகவும் இருக்க வேண்டும்.

(ஆ) தும்பு 1 ம் தரம் : காய்ந்தும், தூசிகள் அற்றும் தும்புத்தடிக ளுக்கு உரந்ததாகவும் இருக்கவேண்டும்.

(இ) ஈர்க்குகள், காய்பந்ததாகவும், தடிப்பானதாகவும், நன்கு சுத்தம் செய்யப்பட்டதாகவும், பூரண நீளமுள்ளதாகவும் இருக்க வேண்டும் ;

(ஈ) மாதம்பை பிரம்புகள் : பிரம்புக்கூடைகளுக்கும், மற்றும் வேலை களுக்கும் பொருத்தமானதும், நன்கு வளர்ந்ததாகவும், குறை ந்த நீளம் 7 அடியும், குறைந்த சுற்றளவு ½ அங்குலமாகவும், முற்றினதும் தேவையானதும் பொருத்தமாயும் இருந்தல் வேண்டும்.

5. மூன்றும் பகுதியில் குறிப்பிட்டதன் பிரகாரம் ஒப்பந்தக்காரர் முழு மையாகவோ, அல்லது பகுதிகளாகவோ, வழங்குவதற்கு வேண்டிய கேள்விப்பத்திரங்களைக் கோரலாம்.

6. மேலே குறிப்பிட்டுள்ள மாதிரிப் பொருட்களைச் சமர்ப்பிக்கும் போது பொருட்களுடைய பெயரையும், அவர்களின் விலாசத்தையும்

மேல் உறையில் எழுதிக் கீழே கைச்சாத்திட்டிருப்பவரின் காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும். மாதிரிப் பொருட்கள் அனுப்பப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்..

7. கீழ்க்காணும் ஸ்தாபனங்களுக்குக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வுதற்கு, முற்பணம் கட்டத் தேவையில்லை—

(அ) கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் ;

(ஆ) அரசாங்கத்தில் நடத்தப்படும் மறைய வர்த்தக நிறுவனங்கள் ;

(இ) கிராம அபிவிருத்தி சபைப் பணிப்பாளரால், அங்கீகரிக்கப்பட்ட கிராம முன்னேற்றச் சங்கங்கள் ;

(ஈ) கூட்டுறவுச் சங்கப் பதிப்பாளரால் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் .

8. கேள்விப் பத்திரங்கள் கீழே கைச்சாத்திடப்பட்ட இடத்தில் இருந்து தயாரிக்கப்பட்ட பத்திரங்களாகவும், டிசம்பர் 11 ம்தேதி பி.ப. 2.30 மணிக்கு முன்பு பெறப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். சிறைச்சாலை ஆணையாளர், கொழும்புக் காரியாலயத்தில் அல்லது ஏதாவது கச்சேரிகளில், கேள்விப் பத்திரத்தில் உள்ள பொருட்களுக்கான பணம் கட்டப்பெற்ற பற்றுச்சீட்டு உடையவருக்கே, கேள்விப்பத்திரம் வழங்கப்படும்.

9. முத்திரையிட்ட உறையின் இடது கைப்பக்க மேல் மூலையில்"........... வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்" எனக்குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள், பதிவுத்தபாலில் அல்லது இக்காரியாலயத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் போடப்படல் வேண்டும்.

10. கேட்கப்பட்ட விலைமதிப்புகள் இலக்கங்கள் மூலமாகவும் எழுத்து மூலமாகவும் எழுதப்பட்டு, பின்னர் ஏதாவது மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் செய்யப்பட்டிருந்து, அதில் விண்ணப்பக்காரரின் கையொப்பம் இல்லாவிடின் அக்கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

11. கீழ் குறிப்பிடப்பட்ட கந்தோரில் 1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ம் தேதி காலை 10.35 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் பிரிக்கப்படும். அத்துடன் கேள்விப்பத்திரச் சொந்தக்காரரும் அந்நேரத்தில் வருவதற்கு அனுமதி அளிக்கப்படுவர்.

12. குறிக்கப்பட்ட தவணையில் தேவையான பொருட்களை வழங்கத் தவறினால், தாமதிக்கப்பட்ட நாட்களுக்கான நஷ்டஈடு செலுத்தப்பட வேண்டும். இப்படியான சந்தர்ப்பத்தில் நீர்கொழும்புச் சிறைச்சாலை அதிகாரி தேவையான பொருட்களை வேறு எவ்விடத்திலாவது வாங்குவதற்குச் செலவாகும் பணம் பொருத்தக்காரரிடம் அறவிடப்படும்.

13. தேர்ந்து எடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர், ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு இலங்கைத் தொழிலாளர்களையே அமர்த்த வேண்டும்.

14. ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கும் கால எல்லைக்குள் ஒப்பந்தக்காரர் ஒருவரையோ எனையோரையோ காரணத்தை வெளிப்படுத்தாமல் நிராகரிப்பதற்கும், முடிவடையச் செய்வதற்கும், நீர்கொழும்புச் சிறைச்சாலை அதிகாரிக்கு உரிமை உண்டு.

15. தேர்ந்தெடுக்கப்படும் எந்தக் கேள்விப் பத்திரக்காரரேனும் அவர்களுடைய கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென எழுத்தில் அறிவித்தலின், 10 நாட்களுக்குள் சிறைச்சாலை அதிகாரியுடன் ஒப்பந்தம் செய்யத்தவறிய அல்லது கட்ட மறுத்தால், அவர்கள் முற்பணமாகக் கூடிய தொகையை இழந்துவிட நேரிடுவதோடு, அரசாங்க ஒப்பந்தம் எதனோடும் சம்பந்தமில்லாதவர்களாகக் கருதப்பட்டு, தவறிய ஒப்பந்தக்காரர் எனக்கருதப்படும் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்பட நேரிடும்.

16. எனைய விபரங்கள்.—அவசியமாயின், கீழெ கைச்சாத்து இடப்பட்டு இருப்பவரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ஆர். டி. டக்வர்த்,
அதிகாரி, நீர்கொழும்புச் சிறைச்சாலை.

நீர்கொழும்புச் சிறைச்சாலை,
1973 ம் ஆடு கார்த்திகை மீ 29 ந உ.

11-323—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

**வெற்றுத் தார்ப்பீப்பாக்கள், வெற்று உருக்குத் தார்த்தகரங்கள், வெற்றுச் சீமேந்து உறைகளை 1974 ம் ஆண்டு கொள்வனவு செய்து அப்புறப்படுத்தலுக்கான கேள்விப்பத்திரம்**

நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சின் வடமாநில ஆள்புலவேலைகள் பிரிவின் கேள்விப்பத்திர சபையின் தலைவரால் இலங்கையரிடமிருந்தும் இலங்கையருடைய ஸ்தாபனங்களில் இருந்தும் கீழ்வரும் பொருட்கள் கொள்வனவு செய்து அப்புறப் படுத்தலுக்கான கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) வெற்றுத் தார்ப்பீப்பாக்கள்.

(ii) வெற்று உருக்குத் தார்த்தகரங்கள்.

(iii) வெற்று சீமேந்து உறைகள்.

கேள்விப்பத்திரங்கள் 1973 ம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ந் திகதி பகல் 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். 1973 ம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ம் திகதி நண்பகல் 12 மணிவரை கேள்விப் பத்திர விண்ணப்பங்கள் வழங்கப்படும். கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் கேள்விப்பணமாக ரூபா 100 க்கு பற்றுச்சீட்டு சமர்ப்பிப்பவர்களுக்கு வழங்கப்படும்.

ஒப்பந்தம் 12 மாத காலத்திற்கு 1.1.74 ல் இருந்து செல்லுபடியாகும். இதன் காலத்தை ஒரு மாதத்திற்கோ அல்லது அதற்குக் கூடியகாலத்திற்கோ அரசாங்கம் தேவையெனக் கருதுமிடத்து நீடிப்பதற்கு உரிமையுண்டு. கேள்விப்பத்திரகாரர் தமது விலைக் கோரிக்கையை கேள்விப்பத்திரம் திறக்கப்பட்ட திகதியில் இருந்து 4 கிழமைக்குள் ஏற்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை, வவுனியா புகையிரத நிலைய வீதி வேலைகள் பணிப்பாளர் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். அருள்ரட்ணம்,
வேலைகள் பணிப்பாளருக்காக,
வடமாநிலம், வவுனியா.

வேலைகள் பணிப்பாளர் காரியாலயம்,
வடமாநிலம், வவுனியா, 26.10.73.

11-374—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

**ஆள்புல சிவில் பொறியியல் பிரிவு—கிழக்குப் பிராந்தியம்**

திருக்கோணமலை பிரிவு

28.9.73 ம் திகதி அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 13.9.73 ம் திகதி கேள்விப்பத்திர அறிவித்தல் சம்பந்தமாக—

சீனன்குடாவில் உள்ள விமான நிலைய இறங்கு பாதை அமைப்பதற்கு வேண்டிய ¾ அங்குல அளவு கருங்கல் 250 கியூப் அளிப்பதற்கான கேள்விப்பத்திரப் படிவம் வினியோகிக்கப்படும் திகதியும், கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியும் கீழ்க்கண்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்விப் பத்திரப் படிவம் 9.11.73 ம் திகதி பி.ப. 3.30 மணி வரையும் வினியோகிக்கப்படும். அக்கேள்விப் பத்திரங்கள் 13.11.73 ம் திகதி மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இ. மகாதேவன்,
நிறைவேற்றுப் பொறியியலாளர்,
திருக்கோணமலை.

திருக்கோணமலை,
1973 ம் ஆடு ஒக்டோபர் மீ 16 ந உ.

11-398—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

**மாறை சிறைச்சாலை கைத்தொழில் பகுதிக்கு 1974 ம் ஆண்டுக்கான மூலப் பொருட்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள்**

மாறை சிறைச்சாலை கைத்தொழில் பகுதிக்கு 1974 வரை உள்ள காலத்தில் கீழ்காணும் மூலப் பொருட்களுக்கு கேள்வி பத்திரங்கள் 1973.11.30 ம் திகதி காலை 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து மாத்திரமே பெற்றுக்கொள்ளப்படும்.

3. கேள்விப் பத்திரங்களுக்கான கட்டுபண விபரங்கள் பின்வருமாறு :

| மூலப்பொருட்கள் | கேள்விப்பத்திர கட்டுப் பணம் ரூ. | ச. | பிணைப் பணம் ரூ. | ச. |
|---|---|---|---|---|
| (அ) பிறிஸ்டல் தும்பு வழங்குதல் .. | 10 | 0 .. | 300 | 0 |
| (ஆ) மெத்தை தும்பு வழங்குதல் .. | 10 | 0 .. | 300 | 0 |
| (இ) துடைப்பு கம்பு கைபிடிகள் வழங்குதல் .. .. | 10 | 0 .. | 300 | 0 |
| (ஈ) சுத்தமான ஈக்கிள் வழங்குதல் .. | 10 | 0 .. | 100 | 0 |
| (உ) மூங்கில் குழாய்கள் பாய் இழைத்தலுக்கு .. .. | 10 | 0 .. | 100 | 0 |
| (ஊ) மாதம்பை பிரம்பு வழங்குதல் .. | 10 | 0 .. | 100 | 0 |
| (எ) சிரட்டைக்கரி வழங்குதல் .. | 10 | 0 .. | 100 | 0 |

4. **விசேட நிபந்தனைகள் :**—எல்லா மூலப் பொருட்களையும் மாறை சிறைச்சாலைக்கு கொண்டு வருதல் வேண்டும்.

(அ) பிறிஸ்டல் தும்பு நன்ருக காயவைத்து சீவி தூசு இல்லாத ஒவ்வொரு கட்டும் 28 ருத்தல் கொண்டதாக இருக்க வேண்டும். குறைந்த பட்சம் 12 அங்குல நீளமுடைய பிறிஸ்டலாக இருக்க வேண்டும். 5% காய்தலுக்கு குறைக்கப்படும். நனைந்து நிறமேறிய தும்புகள் ஏற்றுகொள்ளப்படமாட்டா ;

(ஆ) மெத்தை தும்பு நன்ருக காயவைத்து சீவி தூசு இல்லாதவையாக ஒவ்வொன்றும் 14 ருத்தல் கொண்ட கட்டுகளாக மெத்தைகளுக்கு உகந்ததாக இருத்தல் வேண்டும் நனைந்து நிற மாய தும்புகள் ஏற்றுகொள்ளப்படமாட்டா. காய்தலுக்காக 7½ % வரை தூசு முதலானவைகளுக்கு கழிக்கப்படும்.;

(இ) துடைப்பங்களுக்கு தேவையான கைப்பிடிகள் இவைகள் தலமாக பெல்ல, மல்கார வொகுட்டு கொய்யா, பெனலியாறுவா, அட்டோறியா அல்லது 4½ அடிநீளமும் 3 அடி தொடக்கம் 4 அங்குல சுற்றளவுள்ள கனதியான கப்புகளாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) ஈக்கில் நன்ருக முற்றிய காய்ந்தவையும் சுத்தமானதாயும் இருத்தல் வேண்டும். 4 அங்குல நீளமும் ⅛ அங்குல மொத்தமாயுமிருத்தல் வேண்டும். 2 % காய்தலுக்குக் குறைக்கப்படும் ;

(உ) புதிய மூங்கில் இறுகள் நன்ருக முற்றிய நேரான பாயிழைத்தலுக்கு உகந்தனவாய் 8 அடிக்கு குறையாமலும் குறைந்தது 1½ அங்குல சுற்றளவுமுள்ளனவாய் இருத்தல் வேண்டும் ;

(ஊ) பிரம்புகள் நன்ருக முற்றியிருத்தல் வேண்டும். கூடை இழைப்பதற்கு உகந்ததாயிருத்தல் வேண்டும். பிரம்புகள் ஆகக் குறைந்தது 7 அடி நீளமும் வட்ட சுற்றளவு ½ அங்குலமுமாக இருத்தல் வேண்டும் ;

(எ) சிரட்டைக்கரி சாரணமாய் எரிந்த துருத்திகளுக்கும் ஸ்திரிக்கை பெட்டி சூடாக்குவதற்கும் உகந்ததாய் இருத்தல் வேண்டும். அதிகமாக எரிந்ததும் ½ அங்குலத்துக்கு குறைந்த துண்டுகள் ஏற்றுகொள்ளப்படமாட்டாது. தூசு முதலியவைகளுக்கு 5% தொடக்கம் 7½ % வரை கழிக்கப்படும்.

5. கேள்விப்பத்திரங்கள் மேல் 3 ம் பந்தியில் கூறியவைகளில் ஒன்றிற்கு அல்லது பலதிற்கோ ஒரே முறையில் அனுப்பிவைக்கலாம்.

6. மேற் கூறியவைகளில் சாம்பிள்கள் கேள்வி பத்திரம் சமர்பிக்கும் போது கீழ்க் கையொப்பமிட்டவரின் காரியாலத்திற்கு ஓர் உறையில் போட்டு விண்ணப்பக்காரரின் பெயரும் முகவரியும் இட்டு சமர்பிக்க வேண்டும்.

7. கீழ்க்காணும் நிறுவனங்களுக்கு கேள்விப்பத்திரம் பெறுவதற்கு திருப்பிக் கொடுக்கும் கட்டுப் பணம் கொடுக்கத் தேவையில்லை :—

(அ) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் ;

(ஆ) அரசாங்கத்தினுல் நடாத்தப்படும் விற்பனை ஸ்தாபனம் ;

(இ) கிராம அபிவிருத்தி சபைகள் கிராம அபிவிருத்தி அத்தியட்சகரினுல் அனுமதிக்கப்பட்டவைகள் ;

(ஈ) கூட்டுறவு ஆணையாளரினுல் மதிக்கப்பட்ட கூட்டுறவு சாமான்கள்.

8. விண்ணப்பப் பத்திரங்கள் 1973.11.29 ம் திகதி பி. ப. 2.30 மணி வரை கீழ் கைச்சாத்திட்ட உத்தியோகத்தருக்கு விண்ணப்பித்து அல்லது கட்டுப்பணத்தை கொழும்புச் சிறைச்சாலைப் பகுதி தலைமைக் காரியாலயத்திலும் அல்லது ஏதாவது கச்சேரியில் கட்டிய பற்று சீட்டை சமர்ப்பிப்பவர்களுக்கு மாத்திரம் கொடுக்கப்படும்.

9. கேள்விப் பத்திரங்கள் குறிக்கப்பட்ட உறைகளில் இடப்பக்கத்தில் . . . . . . . . .கேள்விப் பத்திரங்கள் என்று எழுதி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

10. கேள்விப் பத்திரத்தில் ரேட்டுகள் எழுத்திலும் இலக்கத்திலும் இடல் வேண்டும். எழுத்திலும் இலக்கத்திலும் கொடுக்கப்படாத கேள்விப் பத்திரம் நிராகரிக்க இடமுண்டு. ஏதாவது மாற்றமோ அல்லது வெட்டி எழுதினுல் அதன் மேல் விண்ணப்பக்காரர் கையொப்பமிட வேண்டும்.

11. 1973 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ம் திகதி மு. ப. 10.35 மணிக்கு கீழ்காணும் அதிகாரியின் காரியாலயத்தில் விண்ணப்பங்கள் திறந்து பார்வையிடப்படும். விண்ணப்பம் திறக்கப்படும்போது விண்ணப்பித்தவர்கள் அல்லது அவரின் அனுமதி பெற்ற பொறுப்பாளர் இருக்க அனுமதி வழங்கப்படும்.

12. குறிப்பிட்ட தவணையில் விண்ணப்பித்தவர் குறிப்பிட்ட பொருட்கள் கொடுக்கத் தவறினுல் வேறு இடங்களில் பொருட்களை கொந்துராத்துக்காரரின் செலவில் வாங்குவதற்கும் அத்துடன் கொடுக்கத் தவறினுல் ஒவ்வொரு நாட்களுக்கு தண்டணையாக பணம் கட்ட கட்டளையிட அதிகாரி அவர்கட்டு அதிகாரம் உண்டு.

13. ஒப்பந்தக்காரர் இலங்கையர்களை மாத்திரமே வேலைக்கமர்த்தல் வேண்டும்.

14. வேண்டிய விண்ணப்பத்தை ஏற்கவோ நிராகரிக்கவோ மாறை சிறைசாலை அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

15. விண்ணப்பம் ஏற்றுகொண்டதாக அறிந்த நாளிலிருந்து 10 நாட்களுக்குள் கையொப்பமிட வராவிட்டால் கட்டுப்பணம் அரசாங்கத்திற்கு சேரும். அத்துடன், விண்ணப்பக்காரரின் பெயர் ஏமாற்றிய ஒப்பந்தக்காரரின் வரிசையில் சேர்க்கப்படும்.

16. வேறு விவரங்கள் யாவும் கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. ரி. ஜான்ஸ்,
சிறைசாலை அதிகாரி.

மாறை,
1973 ம் ஸ்ரீ ஒத்தோபர் ஞ 30 ந் உ.

11-319—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

### கல்வித் திணைக்களம்

**கொழும்பு தெற்குப் பகுதியிலுள்ள பாட்சாலைகளுக்குப் பால், விஸ்கோத்துக்கள் கொண்டுசெல்வதற்குரிய கேள்விப் பத்திரங்கள் கோரல்**

கேள்விப் பத்திரங்கள் கீழ்க்காணும் சேவைக்காக அழைக்கப்படுகின்றன.

1. 20 இருத்தல் பெட்டிகளிலடைக்கப்பட்ட விஸ்கோத்துக்களை மலிபன் விஸ்கோத்துத் தயாரிப்பாளர்கள் ஸ்தாபனத்திலிருந்தும் இலங்கை விஸ்கோத்துக் கொம்பனி ஸ்தாபனத்திலிருந்தும் கீழ்க் காணும் வட்டாரங்களிலுள்ள பாடசாலைகளுக்குக் கொண்டு செல்லுதல்.

2. குறிப்பிட்ட வட்டாரங்கள் பின்வருவன :

1. கொழும்பு மத்தி,
2. கொழும்பு வடக்கு,
3. கொழும்பு தெற்கு,
4. தெகிவளை-கல்கிசை,
5. மொரட்டுவை,
6. கோட்டை,
7. கொலன்னுவை,
8. கொட்டாவை,
9. கோமகமை,
10. அவிசாவலை,
11. கெஸ்பேவ,
12. பொரளை.

கொழும்பு 7, கிறீன்பாத், கல்வித் திணைக்களப் பிரதேச வித்தியாதிபதி மேற்கூறிய சேவைகளுக்குரிய கேள்விப் பத்திரங்களை 1973 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 23 ஆம் திகதி காலை 10.30 மணி வரை ஏற்றுக் கொள்வார்.

கேள்விப் பத்திரங்கள் மாதிரிப் பத்திரத்தில் அமைந்திருக்க வேண்டும். இம்மாதிரிப் பத்திரங்களை கொழும்பு 7, கிறீன்பாத், கல்வித் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 1973 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 22 ஆம் திகதி காலை 11 மணிவரை விநியோகிக்கப்படும். பொறுப்புப் பணமாக ரூபா 100/- கொழும்பு 7, கிறீன்பாத் கல்வித் திணைக்களத்தில் கட்டியதும் இப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், இத்தகைய பொறுப்புப் பணம் கட்டுவதிலிருந்தும் நீக்கப்பட்டவையாகும்.

கேள்விப் பத்திரங்களை வழங்க முன்னர் கேள்வியாளராக முன் வரும் ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் ரூபா 10,000 க்குக் குறையாத பெறுமதியுள்ள அசைவற்ற ஆதனங்களையுடையவரென்று பகுதிக் காரியாதிகாரியின் 1973 ஆம் ஆண்டுக்குரிய அத்தாட்சிப் பத்திரமும் இரண்டு வட்டாரங்களுக்கு மேல் கேள்விப் பத்திரங்கள் கோர இருப்பின் இரண்டு லொறிகளையாவது தன் சொந்தப் பெயரில் பதிவு செய்து, அவற்றிற்குரிய 1973 ஆம் வருட லைசென்சையும் பெற்றுள்ளாரென்றும் கொழும்பு 7, கிறீன்பாத், கல்வித் திணைக்கள வித்தியாதிபதிக்கு அத்தாட்சிப் படுத்த வேண்டும்.

இரண்டு லொறிகள் தேவையாக இருந்த போதிலும், பிரதேச வித்தியாதிபதி கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்ட வட்டாரங்களையும் வட்டாரங்களில் கொண்டு செல்லும் விதிகளை முன்னிட்டு மேலதிக லொறிகளைப் பாவனையில் விடுவதைப்பற்றித் தீர்மானிப்பார். கேள்விப் பத்திரங்கள் பெறுமுன் அங்கீகாரம் பெற்ற கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடமிருந்தும், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்தி அதிபரிடமிருந்தும் பெற்றுக்கொண்ட அத்தாட்சிப் பத்திரத்தைக் கொண்டு தாங்கள் இவ் வேலையைச் செவ்வனே செய்து முடிக்கக்கூடியவர்கள் என்பதைக் குறித்த வித்தியாதிபதிக்கு நிரூபிக்க வேண்டும். மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாதவர்களுக்குக் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

பிரசேத வித்தியாதிபதியிடமிருந்தோ அல்லது 'கெயர்' ஸ்தாபனத்திடமிருந்தோ ஓடர்கள் கிடைத்த 7 பாடசாலை நாட்களுக்குள் விஸ்கோத்து விநியோகத்தைச் செய்து முடித்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ ஏற்றுக்கொள்ளக் கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு. கேள்வியாளர்கள் இக் கேள்விப் பத்திரங்கள் கவனிக்கப்படும்வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்பட்ட இறுதி நாளிலிருந்து ஆறு கிழமை வரைக்குள் கேள்விப் பத்திரங்களை வாபஸ் வாங்கப்படலாகாது. கேள்விப் பத்திரம் கோரல் பற்றிய விதிகளையும் மற்றும் விபரங்களையும் கொழும்பு 7, கிறீன்பாத், கல்வித் திணைக்களத்தில் நிருவாக உதவியாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. ஜே. எஸ். குணவர்த்தன,
பிரதேச வித்தியாதிபதி.

கல்வித் திணைக்களம்,
கிறீன்பாத்,
கொழும்பு 7,
1973 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 02 ஆம் திகதி.

11-237—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

### ஆயுள்வேத திணைக்களம்

**புதிய மூலிகைகள் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்**

1974 ஆம் ஆண்டு தை மாதம் 1 ந் திகதி முதல் 1974 ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ந் திகதிவரை பொறளை ஆயுள்வேத வைத்திய சாலைக்கு புதிய மூலிகைகள் விநியோகிப்பதற்காக 1973 ம் ஆண்டு 11 ம் மாதம், 28 ம் திகதி முற்பகல் 10 மணிவரை கேள்விச் சபைத்தலைவர் ஆயுள்வேத திணைக்களம், 325, கொட்டா ரோட் கொழும்பு 8 என்ற விலாசத்தில் முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இலங்கையரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

2. 50 ரூபா கட்டுப்பணத்தை ஆயுள்வேத ஆணையாளர் என்ற பெயரில் கொழும்புக் கச்சேரி தவிர்ந்த ஏனைய கச்சேரிகளிலோ அல்லது கொழும்பு யோர்க் வீதியிலுள்ள இலங்கை வங்கியிலோ செலுத்தி பெறும் ரசீதைக் கேள்விப்பத்திரம் கொடுக்கப்படுமுன்னர் கொண்டு வருதல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 1973.11.27 12 மணிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். தபால் மூலம் கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் பணம் செலுத்திப்பெற்ற பற்றுச்சீட்டை முன் கூட்டியே அனுப்பினால் கேள்விப் பத்திரங்களைப் பெற்று கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னதாக அனுப்புவதற்கு ஏற்றதாயிருக்கும்.

3. கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதியில் பதிவுத் தபால் மூலம் கேள்விச்சபைத் தலைவர், ஆயுள்வேத திணைக்களம். 325, கொட்டா ரோட், கொழும்பு 8 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல்பக்க இடது மூலையில் "மூலிகைகள் விநியோகம் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள், பொறளை ஆயுள்வேத வைத்தியசாலை." என்று தெளிவாகக் குறிப்பிடப்படுவதுடன் அனுப்புவரின் பெயரும் விலாசமும் குறிப்பிடப்படல் வேண்டும்.

4. எவ்வாறாயினும், கேள்விப்பத்திரக்காரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விரும்பினால் முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை அவற்றைப் பெறுவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட ஆயுள்வேத திணைக்களத்தின் அலுவலக உதவியாளரிடம் நேரில் கொடுக்கலாம். அவர் கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டதற்கு அத்தாட்சிப் பத்திரம் வழங்குவார். குறிப்பிட்ட முடிவு திகதியன்று முற்பகல் 10 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படமாட்டாது.

5. கேள்விப்பத்திரக்காரர் கேள்விப்பத்திரங்களை திறப்பதற்காகக் குறிப்பிட்ட திகதியன்று குறிப்பிட்ட நேரத்தில் முதல் பந்தியில் குறிப்பிட்ட விலாசத்தில் பிரசன்னமாயிருப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். கேள்விப்பத்திரகாரரின் பெயரும் கேள்வுத் தொகையும் கேள்விக்காரர்களின் முன்னிலையில் வாசித்துக்காட்டப்படும். எந்த கேள்விப்பத்திரகாரரும் ஒரு கேள்விப்பத்திரத்தை மறுபரிசீலனை செய்ய விரும்பினால் ஒப்படைக்கப்பட்ட கேள்விப்பத்திரத்தின் பிரதியினை ஆயுள்வேத ஆணையாளரின் உத்தரவின்படி மறுபரிசீலனை செய்யலாம்.

6. எல்லா அளிப்புகளும் குறிப்பிட்ட முடிவு திகதியன்று ஒரு மாத காலம் வரை பெற்றுக் கொள்வதற்கு திறந்து வைக்கப்படும்.

7. தேவைப்படும் எல்லா வகையான மூலிகைகளையும் கொடுப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரங்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர்/கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரத்தில் தனக்கு/தங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் மொத்தத் தொகுதியின் 5% ஐப் பிணைப் பணமாகக் செலுத்தி ஆயுள்வேத ஆணையாளருடன் ஓர் ஒப்பந்தத்திற்கு வர வேண்டும்.

9. இது சம்பந்தமாக மேலதிக விபரங்களை ஆயுள்வேத ஆணையாளர், ஆயுள்வேத திணைக்களம், 325, கொட்டா ரோட், கொழும்பு 8 ல் பெற்றுக் கொள்ளலாம்.

டப். பி. வலேகம,
ஆயுள்வேத ஆணையாளர்.

ஆயுள்வேத திணைக்களம்,
கொழும்பு-8,
29.10.1973.

11-356—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

## இலங்கை விமானப் படை

1974 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 1974 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி உட்பட (12 மாதங்களுக்கு) கீழ்க்காணும் பொருட்களை விநியோகம்/சேவை செய்வதற்கு பொறியிட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. இக்கேள்விகள் இதன்கீழ் காட்டப்பட்டுள்ள திகதிகளில் முற்பகல் 10.00 மணிவரை கொழும்பு 2, த. பெ. எண் 594, சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள இலங்கை விமானப்படைத்தலைமைக் காரியாலயத்திலிருக்கும் கேள்விச் சபைத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| (அ)<br>விநியோகம்/சேவை | (ஆ)<br>கேள்விப்படிவங்கள் கொடுக்கப்படும் இறுதி நாள் (கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகளில் நண்பகல் 12.00 மணி வரை) | (இ)<br>கேள்வி திறக்கப்படும் திகதி (கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகளில், மு. ப. 10.00 மணி வரை) |
|---|---|---|
| (அ) கொழும்பு, தியத்தலாவை, வீரவில், றிதியகம ஆகிய இடங்களிலுள்ள விமானப் படையினர்க்கு தேசிய கால உணவு வகைகள் விநியோகத்தல் .. .. | 29.11.73 .. | 30.11.73 |
| (ஆ) தியத்தலாவை, சீனன்வாடி விமானப் படை நிலையங்களிலுள்ள மெத்தைகள், தலையணைகள், இருக்கைகள் ஆகியன புதுக்கியமைத்தல் .. .. | 29.11.73 .. | 30.11.73 |
| (இ) கொழும்பு, கட்டுநாயக்க விமானப் படை நிலையங்களுக்கு விறகு விநியோகித்தல் .. | 29.11.73 .. | 30.11.75 |

2. திருப்பிக்கொடுக்கப்படும் கேள்விக்கட்டுப் பணம் ரூபா 75 ஐ தனித்தனி ஒவ்வொரு விநியோகம்/சேவைக்கு இத்தலைமை நிலையத்திலிருக்கும் சிவில் கணக்காளரிடம் கட்டிய பின்னரே கேள்விப்பத்திரங்கள் கொடுபடும். மேற்கூறப்பட்ட விநியோக/சேவைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் " ஆ " பகுதியில் குறிக்கப்பட்டுள்ள திகதிகளில் நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

3. மேலதிக விபரங்களை கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள விமானப் படைத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பி. எச். மெண்டிஸ்,
எயர் கொமடோர்,
விமானப் படைத் தளபதி.

11–314—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85.

---

## சுகாதாரத் திணைக்களம்—தேசிய பால் திட்டம்

### பசும்பால் விநியோகம்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவைகளும்.**—1974 ம் ஆண்டு ஜனவரி 1 ம் திகதி தொடக்கம் 1974 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ந் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் வண்ணம் சுகாதார அலுவலகங்களிலிருந்து ஊட்டும் நிலையங்கட்கு பசும்பால் விநியோகிப்பதற்குரியதும், வெவ்வேறு முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகள் இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து புத்தளப் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. (I) **கேள்விக் கட்டுப்பணம்.**—ரூபா 100 பெறுமானமுள்ள வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது என் பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(II) **கேள்விப்பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள் அனுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களில் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்கு முன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா. கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று அவற்றைக் கேள்விகள் முடிவடையும் காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—இத்திணைக்களத்துடன் ஒப்பந்தம் கொண்டிராதவர்கள் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்குமுன், கேள்விகள் முடிவடையுந் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும். 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலகத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 3 ம் எழுத்துப் பந்தியில் விநியோகிக்கப்படவேண்டிய பொருட்களின் உத்தேசத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், புத்தளம் என்று முகவரி இடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடதுபக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும், கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது இவ்வலுவலகத்தின் செயலாளர்/கணக்காளர் கையில் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 4 ம் எழுத்துப் பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விகாரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது என்து அதிகாரம்பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்டுள்ள வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டு குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

9. **பிணைவைப்புப் பணம்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள் தேவையான பிணைவைப்புப் பணத்தைக் கட்டிய பின்னரே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

10. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப் படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும்.

11. **மற்றைய விபரங்கள்.**—மற்றைய விபரங்களை புத்தளப் பகுதி சுகாதார சேவை அத்தியட்சகர்க்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

| சேவை | பிரிவு | மாதாந்த உபதேசத் தொகை, பயின்ற | கேள்விகள் மூடப்படும் திகதி |
|---|---|---|---|
| 1. மாறவில்ல, தங்கொட்டுவ சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திலிருந்து அவ்வதிகாரியின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்கட்கு | மாறவில்ல, தங்கொட்டுவ .. | 11,000 .. | 30.11.73 காலை 10 மணி |
| 2. சிலாபம் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திலிருந்து அவ்வதிகாரியின் பகுதியிலுள்ள பாலூட்டும் நிலையங்கட்கு | சிலாபம் .. .. | 10,000 .. | 30.11.73 காலை 10 மணி |

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,
புத்தளம்,
1973 ம் ஆல் ஒக்ரோபர் மீ 26 ந உ.

எம். வி. எ. பலசேகர,
சுகாதார சேவை அத்தியட்சகர், புத்தளம்.

11–284—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

**சிறு கைத்தொழிற்றிணைக்களம்**

1,500 உருப்படி அட்டைத்தாளினுற் செய்யப்பட்ட பிரித்தெடுக்கக் கூடிய தாள்களைக் கொண்ட பேரேட்டுப்புற அட்டைகளை வழங்குவதற்கான கேள்விகளை 1973.11.29 காலை 10 மணி வரை கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத்தலைவர், உள்ளூர் வழங்குநர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளவார்.

2. மேலதிக விபரங்கட்கும் கேள்வி நிபந்தனைகட்கும் சிறு கைத்தொழிற் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கவும்.

தொடர்பிலக்கம் : 3-1-(5-64)
சிறுகைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு-1,
1973-10-30.

சோமபால குணதிர,
சிறு கைத்தொழிற்றிணைக்களம்.

11-345—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

**நீர் வழங்கல் வடிகாலமைப்புத் திணைக்களம்**

அம்பாறை நீர் விநியோகத் திட்டம்

**வெற்று பிளீச்சிங் பவுடர் தகரங்கள் தொகையளவில் பிரசித்த ஏல விற்பனை**

1973 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு அம்பாறை நீர் விநியோகத் திட்டப் பிரதேசப் பொறுப்பாளர் காரியாலத்தில் பத்து (10) வெற்று பிளீச்சிங் பவுடர் தகரங்கள் கொண்ட தொகைகள் தொகையளவில் பிரசித்த ஏல விற்பனை மூலம் விற்கப்படுமென இத்தால் அறிவிக்கின்றேன்.

விற்பனைக்கான பத்து (10) வெற்று பிளீச்சிங் பவுடர் தகரங்கள் கொண்ட தொகைகள் மேற்கூறப்பட்ட காரியாலத்தில் 1973 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை பார்வையிடலாம்.

விலைக்கு எடுக்கப்படவிருக்கும் பத்து (10) வெற்று பிளீச்சிங் பவுடர் தகரங்கள் கொண்ட தொகைக்கான பெறுமதி விலைக்கு எடுக்கப்படும் அதே வேளையில் செலுத்தப்படவேண்டும் என்றும் அவை 1973 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆம் திகதி 3.00 மணிக்கு முன்னதாக மேற்படி காரியாலயத்திலிருந்து எடுத்துச் செல்லப்படவேண்டும் என்றும், குறிக்கப்பட்ட நேரத்தின் பின் காரியாலயத்திலிருந்து எடுத்துச் செல்லப்படாத வெற்றுத் தகரங்களுக்குக் காரியாலயம் பொறுப்பல்ல என்றும் இத்தால் அறிவிக்கிறேன்.

ஜே. டீ. ஈ. பெரேரா,
பதில் பணிப்பாளர்.

நீர் வழங்கல், வடிகாலமைப்புத் திணைக்களம்,
இரத்மலானை.
73.10.30.

11-357—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

**நீதிமன்றம் திருகோணமலை**

ஏலவிற்பனை

1973 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15 ந் திகதி பிற்பகல் 2 மணி தொடக்கம் மேற்படி நீதிமன்ற வளவில் நிதிமன்றங்கள் நிர்வாகக் காரியதரிசி முன்னிலையில் கீழ்க்காட்டும் பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

கு. விக்னராஜா,
நீதவான், திருகோணமலை.

1973 ம் ஆல் ஒக்டோபர் மீ 24 ந உ.

| வழக்கு இலக்கம் | பொருட்கள் விபரம் |
|---|---|
| 1. 15232 .. | பாவித்த றலிபெடல் துவிச்சக்கரவண்டி இல. ஈ எல் 1178 |
| 2. 10579 .. | மொனரா பெடல் துவிச்சக்கரவண்டி—01594 |
| 3. எ. ஆர் : 2491/72 | கம்பர் பெடல் துவிச்சக்கரவண்டி இல. எ. ஜீ. 94140 |
| 4. எ. ஆர் 2490/72 .. | 1. ரலிபெடல் துவிச்சக்கரவண்டி இல. 34528<br>2. இல. 56983 ஒரு றஜ் பெடல் துவிச்சக்கர வண்டி |
| 5. எ. ஆர். 2670/72 | பழுதடைந்த துவிச்சக்கரவண்டி இல. 2385 |
| 6. 20369 .. | ஒரு பழுதடைந்த றலி பெடல் துவிச்சக்கர வண்டி இல. 89201 |
| 7. எ. ஆர் 2491/72 .. | துவிச்சக்கர வண்டி பிரேம் இல. பீ. ஓ 37122 |
| 8. 13480 .. | முள்ளுக்கம்பி 2 சுருள் |
| 9. 20185 .. | 47 பால் ரின் |
| 10. 23622 .. | 7 இறுத்தல் பித்தளை குழாய்கள் |
| 11. எ. ஆர். 2260/73 | இரு வள்ளங்கள் |
| 12. 18691 .. | விற்றுமோல்ட் 1 ரின், வோட்டர் பரிஸ் கம்பவுண்ட் 1 போத்தல். |

| | | | |
|---|---|---|---|
| பழையகத்திகள் | .. | .. | 10 |
| கோடரி | .. | .. | 3 |
| வாள் | .. | .. | 2 |
| இரும்புச் சலாகைகள் | .. | .. | 6 |
| இரும்புக்கம்பி | .. | .. | 4 |

வேறும் பல பொருள்கள்.

கு. விக்னராஜா,
நீதவான், திருகோணமலை.

1973 ம் ஆல் ஒக்டோபர் மீ 24 ந உ.

11-378—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85.

# ஆய்விற்பனையும், குத்தகை விற்பனையும்

## 1974 ம் வருடத்திற்குத் திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள சாராயத் தவறணைகளைக் குத்தகைக்கு விடுதல்

1974 ம் வருடம் ஜனவரி மாதம் 1 ந் தேதி முதல் 1974 ம் வருடம் டிசெம்பர் மாதம் 31 ந் தேதி வரையுள்ள காலத்தினுள் சாராயம் சில்லறையாக விற்பனை செய்வதன் பொருட்டு 1973 நவம்பர் மாதம் 9 ஆம் தேதிய 85 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ள சாராயத் தவறணைகளைக் குத்தகைக்குவிடும் நிபந்தனைகளுக்கும் மதுபானத் தீர்வை அனுமதிப்பத்திரக் கட்டுப்பாடுகட்கும் அமைவாக அக்காலத்தினுள் நடைமுறையிலிருந்து வரும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சாராயத் தவறணைகளுக்காகக் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. எவ்வொரு கச்சேரியிலிருந்தாவது பெற்றுக் கொள்ளப்பட்ட உரிய கேள்விப் படிவத்தில் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் (அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் குறிப்பிடவேண்டியதுடன் முத்திரையுமிட்டு (சீல்) 1973 ம் வருடம் நவம்பர் மாதம் 27 ந் திகதி கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளப்படும் முடிவு நேரத்திற்கு முன்னர் திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபருக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது அந்நேரத்திற்கு முன்னர் திருக்கோணமலை கச்சேரியில் அதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் அதனை இடுதல் வேண்டும். "ஒவ்வொரு தவறணைக்கும் கேள்விவைப்புத் தொகையாக கீழே குறிப்பிட்டுள்ள தொகையை கட்டிப் பற்றுச்சீட்டை ஒவ்வொரு கேள்விப் பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும்.

| தவறணை இலக்கம் | | கட்டப்பட வேண்டிய தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| 1 | .. | 5,000 |
| 2 | .. | 5,000 |
| 3 | .. | 4,000 |
| 4 | .. | 1,000 " |

3. தமது சொந்தப் பெயரிலேயே கேள்விப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். இலங்கையரல்லாத ஒருவரினால் அல்லது முகவர் ஒருவரின் மூலமாக அல்லது 1973 ம் வருடம் நவம்பர் மாதம் 9 ஆம் திகதிய 85 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ள 1974 ம் வருடத்திற்குச் சாராயத் தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளின் பிரகாரம் தகுதியற்ற ஒருவரால் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

4. ஒருவர் ஒரு தவறணைக்கு ஒரு கேள்விப்பத்திரத்தை மாத்திரமே சமர்ப்பிக்கலாம். கூட்டாக ஐவருக்கு மேற்பட்டோர் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தலாகாது.

5. (1) கேள்விக்காரர்கள் தாம் கேள்வி கேட்கும் தொகையில் குறைந்த பட்சம் 100 க்கு 25 வீதத்திற்குக் குறையாத சொத்து அத்தாட்சிப் பத்திரம், அவ்வத்தாட்சிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள அசைவற்ற ஆதனங்கள் அமைந்திருக்கும் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டு ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடனும் சமர்ப்பித்தல் வேண்டும். இதன் பிரகாரம் கேள்வி வைப்புப்பணம் பற்றுச்சீட்டுக்கு மேலதிகமாகச் சொத்து அத்தாட்சிப் பத்திரமும் கேள்விப்பத்திரங்களுடன் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) பலர் கூட்டாகச் சேர்த்து ஒரு கேள்விப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கும்போது அவர்களின் கேள்வித் தொகையின் 100 க்கு 25 வீதத்திற்குக் குறையாத சொத்து அத்தாட்சிப்பத்திரம், ஒருவர் அல்லது பலர் சமர்ப்பிப்பதற்கு அவகாசம் உண்டு.

(3) ஒன்றுக்கு மேற்பட்ட தவறணைகளுக்குக் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் கேள்விக்காரர்கள் ஒவ்வொரு தவறணைகளுக்கும் வெவ்வேறு சொத்து அத்தாட்சிப்பத்திரங்களை இணைத்தல் அவசியமில்லை. எவ்வாறாயினும், அக்கேள்விக்காரர்கள் தாங்கள் கேட்கும் எல்லாத் தவறணைகளின் மொத்தக் கேள்வித் தொகைக்கு 100 க்கு 25 வீதத்திற்குக் குறையாத சொத்து அத்தாட்சிப்பத்திரத்தை முதல் சமர்ப்பிக்கும் கேள்விப் பத்திரத்துடன் இணைத்து, ஏனைய மற்றைய கேள்விப்பத்திரங்களில் சொத்து அத்தாட்சிப்பத்திரம் எந்தக் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது என்று கேள்விப்பத்திரங்களில் குறிப்பிட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) ஒரு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்ட சொத்து அத்தாட்சிப்பத்திரம், சொத்து அத்தாட்சிப்பத்திரத்திற்குட்பட்ட ஆதனங்களை விற்றோ, ஈடுவைத்தோ குத்தகைக்குக் கொடுத்தோ அல்லது வேறு எந்த வகையிலாவது உரிமை மாற்றாதிருந்தால் சொத்து அத்தாட்சிப் பத்திரம் பெறப்பட்ட தேதியிலிருந்து ஐந்து வருடங்களுக்கு செல்லுபடியாகும். முந்திய வருடங்களில் பெறப்பட்ட சொத்து அத்தாட்சிப்பத்திரங்களை சமர்ப்பிக்கும் கேள்விக்காரர்கள் மாவட்ட காணிப்பதிவாளரிடமிருந்து சொத்து அத்தாட்சிப்பத்திரத்தில் குறிப்பிட்ட ஆதனங்கள் வேறு எவ்வித பொறுப்புக்களுக்கும் உபயோகப்படுத்தப்படவில்லையென்று அத்தாட்சிப்பத்திரம் பெற்று இணைத்தல் வேண்டும்.

(5) பெற்றுள்ள தனியுரிமைக்குரிய கால எல்லை முடியும்வரை சொத்து அத்தாட்சிப்பத்திரத்திற்கு உட்பட்ட ஆதனங்களை விற்றல், ஈடுவைத்தல், குத்தகைக்கு விடுதல் அல்லது வேறு ஏதாவதொரு முறையில் உரிமையை மாற்றல், தவறணையைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளை அலட்சியம் செய்தலாகக் கருதப்படும்.

6. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் விற்பனை நிபந்தனையிலும் ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவும், அரசாங்க அதிபரால் குறிப்பிடப்படும் பிணைப்பணத்தைச் செலுத்தவும், தேவையான முத்திரைகளைக் கொடுக்கவும் தயாராயிருத்தல் வேண்டும்.

7. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர்கள் குத்தகைக்காரர்கள் என்று அறிவிக்கப்பட்ட மாத்திரத்தில் தாங்கள் எந்த இடத்தை தவறணைக்காக தெரிவு செய்திருக்கிறார்கள் என்பதையும் திருக்கோணமலை அரசாங்க அதிபருக்கு அறிவித்து அவரிடமிருந்து அதற்கான அனுமதியையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும். தற்சமயம் தவறணைகள் நடக்கும் இடங்களில் இம்முறைகள் தவறணைகள் நடத்த முடியும் என்பதற்கு உத்தரவாதம் அளிக்கமுடியாது.

8. குத்தகையைப் பெற்ற கேள்விக்காரர்களுக்கு அதுவிடயம், அறிவிக்கப்பட்டதும் குறிப்பிடப்பட்ட பிணைப்பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சம் அன்னாரின் கேள்வி வைப்புப்பணம் உரிமையற்றுப் போனதைப் பிரகடனப்படுத்துவதுடன் அன்னாரின் பெயர் மதுபானத் தீர்வை அனுமதிப் பத்திரங்களுக்குரிய "தவறியோர் பெயர் அட்டவணையில்" உட்படுத்தப்படும். இதுபோன்ற சந்தர்ப்பங்களிலன்றி குத்தகை பெற்றவர் குத்தகை நிபந்தனைகளுக்கு கையெழுத்திடுவதுடன் குறித்த பிணைப்பணமும் செலுத்தப்பட்ட பின்னர் சகல கேள்விக்காரர்களுக்கும் கேள்வி வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

9. எந்த ஒரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ திருக்கோணமலை அரசாங்க அதிபருக்கு மாத்திரமே உரிமையுண்டு.

10. இல. 1 முதல் 4 வரை உள்ள தவறணைகளுக்கான கேள்விகள் 1973 ம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ந் திகதி காலை 9.30 மணிக்கு முடிவடையும். ஒவ்வொரு கேள்விக்காரரும், கேள்விகள் முடிவடையும் நேரத்தில் திருக்கோணமலைக் கச்சேரியில் பிரசன்னமாயிருத்தல் வேண்டும். கேள்விகளுக்குரிய நேரம் முடிவடைந்ததும் குத்தகைக்காரரைத் தெரிவு செய்யப்படும்.

கேள்விகள் முடிவடையும் நேரம்

| தவறணை இல. | | நேரம் |
|---|---|---|
| 1 | .. | மு. ப. 9.30 மணி |
| 2 | .. | மு. ப. 9.30 மணி |
| 3 | .. | மு. ப. 9.30 மணி |
| 4 | .. | மு. ப. 9.30 மணி |

மேற்கொண்டு விபரங்கள் அறியவேண்டுமாயின் திருக்கோணமலைக் கச்சேரிக்கு முனுப்பண்ணிக் கேட்டுத் தெரிந்துகொள்ளவும்.

மேலே குறிப்பிட்ட அட்டவணை

| தவறணை இல. | பிரிவு | உள்ளூர்ப் பகுதி | தவறணை திறக்கும் நேரம் மு. ப. | தவறணை மூடும் நேரம் பி. ப. |
|---|---|---|---|---|
| 1 .. | நகரசபை, திருக்கோணமலை .. | வட்டார இல. 1, நகரசபை, திருக்கோணமலை .. .. | 8.00 .. | 8.00 |
| 2 .. | நகரசபை, திருக்கோணமலை .. | வட்டார இல. 5, நகரசபை, திருக்கோணமலை .. .. | 8.00 .. | 8.00 |
| 3 .. | நகரசபை, திருக்கோணமலை .. | வட்டார இல. 9, நகரசபை, திருக்கோணமலை .. .. | 8.00 .. | 8.00 |
| 4 .. | கிராமசபை, நிலாவெளி .. | நிலாவெளி .. .. .. .. | 8.00 .. | 6.30 |

திருக்கோணமலைக் கச்சேரி,
1973 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 27 ந் வ.

திஸ்ஸ தேவேந்திரா,
திருக்கோணமலை மாவட்ட
அரசாங்க அதிபர்.

11-338—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

### 1974 ம் வருடத்திற்கு காலி மாவட்டத்தில் சாராயத் தவறணைகளைக் குத்தகைக்குவிடுதல்

1974 ம் வருடம் சனவரி மாதம் 1 ந் திகதி முதல் 1974 ம் வருடம் திசெம்பர் 31 ந் திகதி வரையுள்ள காலத்துள் சாராயம் சில்லறையாக விற்பனை செய்வதன் பொருட்டு 1973 ம் வருடம் நொவெம்பர் மாதம் 09 ந் திகதிய 85 ம் இலக்கத்தைக் கொண்ட இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சாராயத் தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கும் மதுபானத் தீர்வை அனுமதிப்பத்திரத்துக்கும் தற்போது நடைமுறையிலிருந்துவரும் நிபந்தனைகளுக்குமிணங்க கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சாராயத் தவறணைகளுக்குக் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எவ்வொரு கச்சேரியிலிருந்தாவது பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பித்தல் வேண்டும். எல்லாக் கேள்விப் பத்திரங்களையும் முத்திரை (வலீல்) வைத்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் (அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு) தவறணையின் இலக்கம், பெயர் ஆதியனவற்றைக் குறிப்பிட்டு 1973 நொவெம்பர் மாதம் 21 ந் திகதி கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் நிறுத்தப்படும் நேரத்துக்கு முன்னர் காலி அரசாங்க அதிபருக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும் அல்லது அந்நேரத்துக்கு முன்னர் கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் அதனை இடுதல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள், 1973 நொவெம்பர் 09 ந் திகதிய 85 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 1974 ம் வருடத்துக்கு சாராயத் தவறணைகளைக் குத்தகைக்குவிடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

4. 1973 நொவெம்பர் மாதம் 21 ந் திகதி அட்டவணையிற் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் நிறுத்தப்படும். அந்நேரம் கேள்விக்காரர்கள் கச்சேரியில் சமுகமாயிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடனேயே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும்.

5. இது சம்பந்தமான மேலதிக விபரங்களைக் காலிக் கச்சேரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

டபிள்யூ. ஜே. பர்னாந்து,
காலி மாவட்ட அரசாங்க அதிபர்.

காலிக் கச்சேரி,
1973 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 30 ந் வ.

அட்டவணை

| தொடர் இல. | தவறணையின் பெயர் | திறக்கும் நேரம் | மூடும் நேரம் | வட்டாரம் | அமைந்துள்ள பிரதேசம் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளல் முடிவுறும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 .. | கட்டுகொடை 1 ம் இலக்க சாராயத் தவறணை | மு. ப. 8.00 .. | பி. ப. 7.00 .. | காலி மாநகரசபை 74½ மைல் தூணுக்கும் போணவிஸ்டாவுக்கும் இடையே | காலி—மாத்தறை | 5,000 .. | மு.ப. 10.00 |
| 2 .. | ஹீனட்டிகல 2 ம் இலக்க .. சாராயத் தவறணை | மு. ப. 8.00 .. | பி. ப. 7.00 .. | தல்பேபத்துவ .. | ஹீனட்டிகல கிராமம் | 5,000 .. | மு.ப. 10.00 |

11-336—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

### சாராய, கள்ளுத் தவறணைக் குத்தகை விற்பனை

### குருநாகல் மாவட்டம்—1974

இன்றைய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் மதுபான அதிபரால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் சாராயக் கள்ளு விற்பனைப் பிரகாரம் அனுமதிப் பத்திரங்களில் பொது நிபந்தனைகளுக்கும், தற்பொழுது அமுலில் இருக்கும் எல்லா மதுபானப் பத்திரங்களின் நிபந்தனைகளுக்கும், பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமையும் கீழ்க் குறிக்கப்பட்ட அட்டவணையில் அடங்கியுள்ள சாராயக் கள்ளுத் தவறணைகளில் 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் திகதி தொடக்கம் திசெம்பர் மாதம் 31 ந் திகதி வரை சாராயம், கள்ளைக் கீழே குறிப்பிட்ட தவறணைகளில் விற்பனை செய்வதற்குக் குருநாகல் மாவட்ட அரசாங்க அதிபரால் 1973 ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ந் திகதி வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. சாராயக், கள்ளுக் குத்தகை எடுக்க விரும்பும் விண்ணப்பக்காரர்கள் குறிக்கப்பட்ட பத்திரங்களில் கேள்விகளை அனுப்புதல் வேண்டும். குறிக்கப்பட்ட தொகையை வைப்புத் தொகைப் பணமாகக் கச்சேரியில் கட்டியதற்குக் கச்சேரியின் பற்றுச்சீட்டையும் தங்களின் பெறுமதிப் பத்திரங்களையும் பிரசுரிக்கப்பட்ட சாராய, கள்ளுக் குத்தகை விற்பனை நிபந்தனைகளுக்கமைய முறையாகக் கேள்விப்பத்திரங்களுடன் மெழுகிடப்பட்ட உறையிலிட்டு உறையின் மேல், இடது பக்கத்தில் தவறணையின் பெயரும் இலக்கமும் எழுதிக் குறிக்கப்பட்ட திகதிக்கு முன் குருநாகல் கச்சேரியிலிருக்கும் தபாற் பெட்டியில் அல்லது பதிவு செய்யப்பட்ட தபாலில் குருநாகல் அரசாங்க அதிபர் அவர்களுக்குக் கிடைக்குமாறு அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்களில் திருத்தங்கள் ஏதும் இருப்பின் அவைகளை விண்ணப்பகாரர் கையொப்பமிட்டு அனுப்புதல் வேண்டும். இல்லாவிட்டால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. விண்ணப்பக்காரர்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியாகிய 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ந் திகதி இக்கச்சேரியில் சமுகமளிக்க வேண்டும்.

5. விண்ணப்பக்காரர்களின் கேள்விப் பத்திரங்களை அரசாங்க அதிபர் அவர்களின் விருப்பப்படிக் குறிப்புக் கூறுமல் ரத்துச் செய்யப்படும்.

6. சித்தியெய்திய விண்ணப்பக்காரர் பிரத்தியேக உரிமையாளரெனப் பிரகடனப்படுத்தப்பட்டவுடன் குருநாகல் மாவட்ட அரசாங்க அதிபர் குறிக்கப்படும் தொகையை உத்தரவாத வைப்புப் பணமாக உரிமையாளரெனப் பிரகடனப்படுத்தப்பட்ட திகதியில் நண்பகல் 12 மணிக்குப் பிந்தாமல் செலுத்த வேண்டும். மேலும் விண்ணப்பக்காரர் குத்தகை விற்பனை நிபந்தனைகளடங்கிய அட்டவணையில் கைச்சாத்திட வேண்டும்.

7. ஏனைய விபரங்கள் இக்கந்தோரில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

கச்சேரி,
குருநாகல்,
1973 ம் ஆண்டு ஒத்தோபர் மீ 31 ந் த.

சந்திரானந்த டி. சில்வா,
குருநாகல் மாவட்ட அரசாங்க அதிபர்.

## அட்டவணை

### அனுமதிக்கப்பட்ட சாராயத் தவறணைகள் 1974

| இலக்கமும் தவறணையின் பெயரும் | பகுதி | கிராம எல்லைகள் | திறக்கும் நேரம் காலை | மூடும் நேரம் மாலை |
|---|---|---|---|---|
| 1. கட்டிமஹான | கடுகம்பொல ஹத்பத்து | கட்டிமஹான கிராம எல்லைக்குள் | 8 மணி | 7 மணி |
| 2. துனகதெனிய | ஷை | துனகதெனிய கிராம எல்லைக்குள் | 8 மணி | 7 மணி |
| 3. யக்வில | ஷை | யக்வில கிராம எல்லைக்குள் | 8 மணி | 7 மணி |
| 4. குருநாகல் | குருநாகல் மாநகர எல்லைக்குள் | 2 ம், 3 ம், 4 ம், 5 ம், 6 ம், 8 ம், 9 ம் வட்டாரங்களுக்குள் (எஸ்பிளனேட் வீதி, பசார் வீதி, பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள வீதிகள் தவிர) | 8 மணி | 8 மணி |
| 5. மாவத்தகம | வேயுட வில்லி ஹத்பத்து | மாவத்தகம கிராம எல்லைக்குள் | 8 மணி | 8 மணி |
| 6. இரிஉல்ல | கடுகம்பொல ஹத்பத்து | மல்கமுவ கிராம எல்லைக்குள் | 8 மணி | 7 மணி |
| 7. நாரம்மல | தம்பதெனி ஹத்பத்து | நாரம்மல கிராம எல்லைக்குள் | 8 மணி | 7 மணி |

### அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகள் 1974

| இலக்கமும் தவறணையின் பெயரும் | பகுதி | கிராம எல்லைகள் | திறக்கும் நேரம் காலை | மூடும் நேரம் மாலை |
|---|---|---|---|---|
| 1. இரிஉல்ல | கடுகம்பொல ஹத்பத்து | மல்கமுவ கிராம எல்லைக்குள் | 8 மணி | 7 மணி |
| 2. உடுபத்தாவ | ஷை | உடுபத்தாவ கிராம எல்லைக்குள் | 8 மணி | 7 மணி |
| 4. நாரம்மல | தம்பதெனி ஹத்பத்து | நாரம்மல கிராம எல்லைக்குள் | 8 மணி | 7 மணி |
| 5. கடுபிடிய | வெயுடவில்லி ஹத்பத்து | கடுபிடிய கிராம எல்லைக்குள் | 8 மணி | 7 மணி |
| 6. குருநாகல் | குருநாகல் மாநகர எல்லைக்குள் | 1 ம், 9 ம், 10 ம், 11 ம், 12 ம் வட்டாரங்களுக்குள் | 8 மணி | 8 மணி |

### குத்தகைப் பணமும் கேள்விப்பத்திரங்கள் மூடப்படும் நேரமும்—சாராயத் தவறணைகள்

| இலக்கமும் தவறணையின் பெயரும் | | வைப்புப் பணம் ரூபா | கேள்விப் பத்திரம் மூடப்படும் நேரம் |
|---|---|---|---|
| 1. கட்டிமஹான | சாராயத் தவறணை | 500 | மு.ப. 9.30 |
| 2. துனகதெனிய | ஷை | 500 | ,, |
| 3. யக்வில | ஷை | 3,000 | ,, |
| 4. குருநாகல் | ஷை | 5,000 | ,, |
| 5. மாவத்தகம | ஷை | 2,000 | ,, |
| 6. இரிஉல்ல | ஷை | 5,000 | ,, |
| 7. நாரம்மல | ஷை | 5,000 | ,, |

### குத்தகைப் பணமும் கேள்விப்பத்திரங்கள் மூடப்படும் நேரமும்—கள்ளுத் தவறணைகள்

| இலக்கமும் தவறணையின் பெயரும் | | வைப்புப் பணம் ரூபா | கேள்விப் பத்திரம் மூடப்படும் நேரம் |
|---|---|---|---|
| 1. இரிஉல்ல | கள்ளுத் தவறணை | 1,000 | மு.ப. 11.00 |
| 2. உடுபத்தாவ | ஷை | 250 | ,, |
| 4. நாரம்மல | ஷை | 1,000 | ,, |
| 5. கடுபிடிய | ஷை | 1,000 | ,, |
| 6. குருநாகல் | ஷை | 3,000 | ,, |

11-401—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## மதுபான அனுமதிச்சீட்டு—புகைவண்டி ஹோட்டல்களும் உணவு வழங்கல் சேவையும்

1930 ஆம் ஆண்டு செப்தெம்பர் 30 ஆந் திகதிய 200 ஆம் இலக்க நாட்டு வரி அறிவித்தலின் விதிகளுக்கு எற்ப, 1974 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடையும் அனுமதிச் சீட்டுக் காலத்தின் பொருட்டு, இத்துடன் இணைக்கப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்ட அனுமதிச்சீட்டுக்களின் பொருட்டு கொழும்பு, களுத்துறை, காலி, குருநாகல், கண்டி, நுவரெலியா, அனுராதபுரம், யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை ஆகிய இடங்களின் அரசாங்க அதிபர்களுக்கும் கொழும்பு நாட்டுவரி ஆணையாளர்களுக்கும் 1973 ஒத்தோபர் 5 ஆந் திகதி நான் விண்ணப்பம் செய்துள்ளேனென இத்தால் அறிவித்துக்கொள்ளுகிறேன்.

குறிப்பிடப்பட்ட அட்டவணை

| விண்ணப்பக்காரரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பிக்கப்பட்ட அனுமதிச்சீட்டின் விபரம் | தற்போதுள்ள அனுமதிச் சீட்டுக்களை அல்லது அனுமதிச் சீட்டை புதுப்பித்தல் பொருட்டு அல்லது புதிய அனுமதிச்சீட்டின் பொருட்டு விண்ணப்பஞ் செய்யப்பட்டுள்ளதா? | அனுமதிச்சீட்டுப் பெறுவதற்கான வளவின் அமைவிடம் |
|---|---|---|---|
| பொது முகாமையாளர் புகையிரதத் திணைக்களம், கொழும்பு 10 | புகைவண்டி ஹோட்டல்களும் உணவு வழங்கற் சேவையும் (சில்லறை விற்பனை) | தற்போதுள்ள அனுமதிச்சீட்டைப் புதுப்பித்தல் | புகைவண்டி நிலையம், கொழும்பு கோட்டை, கொழும்பு 1 |
| ஷை | ஷை .. | ஷை .. | புகைவண்டி நிலையம், மருதானை, கொழும்பு 10 |
| ஷை .. | ஷை .. | ஷை .. | மத்திய மதுபானக் களஞ்சியம், புகைவண்டி நிலையம், கொழும்புக் கோட்டை |
| ஷை .. | ஷை .. | ஷை .. | புகைவண்டி உணவுச்சாலைக் கார்களும் சிற்றுண்டிச்சாலைக் கார்களும் |
| ஷை .. | ஷை .. | ஷை .. | புகைவண்டி நிலையம், அளுத்கம |
| ஷை .. | ஷை .. | ஷை .. | புகைவண்டி நிலையம், காலி |
| ஷை .. | ஷை .. | ஷை .. | புகைவண்டி நிலையம், பொல்காவலை |
| ஷை .. | ஷை .. | ஷை .. | புகைவண்டி நிலையம், கண்டி |
| ஷை .. | ஷை .. | ஷை .. | புகைவண்டி நிலையம், நானு-ஓயா |
| ஷை .. | ஷை .. | ஷை .. | புகைவண்டி நிலையம், அனுராதபுரம் |
| ஷை .. | ஷை .. | ஷை .. | புகைவண்டி நிலையம், யாழ்ப்பாணம் |
| ஷை .. | ஷை .. | ஷை .. | புகைவண்டி நிலையம், தலைமன்னார் |
| ஷை .. | ஷை .. | ஷை .. | புகைவண்டி நிலையம், ஹட்டன் |
| ஷை .. | ஷை .. | ஷை .. | புகைவண்டி நிலையம், திருகோணமலை |

த. பெ. இல. 355,
கொழும்பு,
1973 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 10 ந் வ.

ஏ. தி. ஜீ. மடுகல்ல,
பதில் பொது முகாமையாளர்.

11-402—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக் குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும்குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினல்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள் ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|
| **நவெம்பர்** | | **02.11.73** | வெள்ளி | **24.10.73** | புதன் | ந.ப. **12.00** |
| | | **09.11.73** | வெள்ளி | **31.10.73** | புதன் | ந.ப. **12.00** |
| | | **16.11.73** | வெள்ளி | **07.11.73** | புதன் | ந.ப. **12.00** |
| | | **23.11.73** | வெள்ளி | **14.11.73** | புதன் | ந.ப. **12.00** |
| | | **30.11.73** | வெள்ளி | **21.11.73** | புதன் | ந.ப. **12.00** |
| **டிசெம்பர்** | | **07.12.73** | வெள்ளி | **28.11.73** | புதன் | ந.ப. **12.00** |
| | | **14.12.73** | வெள்ளி | **05.12.73** | புதன் | ந.ப. **12.00** |
| | | **21.12.73** | வெள்ளி | **12.12.73** | புதன் | ந.ப. **12.00** |
| | | **28.12.73** | வெள்ளி | **19.12.73** | புதன் | ந.ப. **12.00** |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
**1972 ம் ஆம் ஓகத்து மீ 18 ந் உ.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

B 4 ஃ